IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.38/2021

Deposition of Witness : PW-1

Name : பாண்டியராஜன்

Father's Name /W/o : த/பெ.பீமாரெட்டி என்கிற துரைசாமி ரெட்டியார்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : மோசூர் கிராமம், அரக்கோணம் வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 02.11.2023

குறுக்கு விசாரணை.

1. இந்த வழக்கு எதற்கு போட்டுள்ளேன் என்றால் நான் அனுபவிக்கும் நிலத்தை அவர்கள் அபகரிக்கிறார்கள் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். சொத்து எனக்கு எப்படி வந்தது என்றால் என் பெரியம்மாவிற்கு நான் வளர்ப்பு மகன் என்பதால் எனக்கு கொடுத்தார்கள். என் பெரியம்மாவிற்கு சொத்து எப்படி வந்தது என்றால் என் பெரியம்மாவின் அப்பா வாங்கி கொடுத்துள்ளார். அவரின் பெயர் எல்லப்ப ரெட்டியார். அவர் மனைவி பெயர் கன்னியம்மாள். எல்லப்ப ரெட்டிக்கும் கன்னியம்மாளுக்கும் எத்தனை பிள்ளைகள் என்றால் 7 பேர். அவர்கள் பெயர் கிருஷ்டப்பரெட்டியார், துல்கானரெட்டியார், சந்தரம்மாள், முனியம்மாள், முத்தம்மாள், கனகம்மாள், வள்ளியம்மாள் ஆகியோர். வள்ளியம்மாள் என் தயார் ஆவர். துல்கானரெட்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பேர். வாசுதேவரெட்டியார், ஜெயராமரெட்டியார், இராமலிங்க ரெட்டியார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அவருக்கு நான்கு பிள்ளைகள் என்றாலும் அதில் ஒருவர் பெயர் கோபால்ரெட்டி என்றாலும்

அவர்தான் மூத்தவர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த மகன்கள் பெயர் கோபால்ரெட்டி, வாசுதேவரெட்டியார் ஜெயராமரெட்டியார், ஸ்ரீதர் ரெட்டியார் என்றால் ஸ்ரீதர் ரெட்டி கிடையாது. வாசுதேவரெட்டியார் பிள்ளைகள் பிரதிவாதிகள் என்றால் வாசுதேவரெட்டியார் பிள்ளைகளும் ராமலிங்கரெட்டியார் பிள்ளைகளும் பிரதிவாதிகள் ஆவர்.

2. பிரதிவாதிகளுக்கு முத்தம்மாள் அத்தை என்றால் ஆம். நான் முத்தம்மாளின் தங்கை மகன் என்றால் ஆம். முத்தம்மாள் பெயரில் என்ன சொத்து இருந்தது என்றால் நிலம் மற்றும் வீடு இருந்தது. சர்வே எண் ஞாபகம் இல்லை. முத்தம்மாளின் பெயரியில் இருந்தது சர்வே எண்.596/3 என்றாலும் அதில் 40 சென்ட் என்றால் ஆம். முத்தம்மாளின் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் இல்லை. முத்தம்மாள் தான் வளர்ப்பு தாய் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால் வீடு தான் ஆதாரம். நிரந்தரமாக அங்குதான் நான் உள்ளேன். முத்தம்மாள் வீட்டில் உள்ளதால் நான் வாரிசு என்று சொல்கிறேனா என்றால் இல்லை. என் பெயரில் ஊர்க்காரர்கள் முன்னிலையில் சொத்து எழுதிக்கொடுத்துள்ளார். எந்த வருடம் எழுதிக்கொடுத்தார் என்றால் 1976 க்கு மேல் எனக்கு தற்சமயம் ஞாபகம் இல்லை. தற்சமயம் வேறு எந்த சொத்தை பற்றியும் ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல.

3. முத்தாமாளுக்கு வீடு வந்தது எந்த சர்வே எண் என்றால் 596/3 தான். இரண்டு சொத்திற்கும் சேர்த்து எனக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் பத்திரம் இல்லை. அவர் இறப்பற்கு முன்பு ஊர் முன்னிலையில் எனக்கு எழுதி கொடுத்தார். அந்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்னா என்றால் பிரதிவாதிகள் அதை ஏமாற்றி எடுத்துச்சென்றுவிட்டார்கள். நான் முத்தாமாளுக்கு வாரிசும் இல்லை அவர் எனக்கு எந்த சொத்தும் எழுதி வைக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் முத்தம்மாளின் வீட்டிலும் நான் இல்லை என்றால் நான் நிரந்தரமாக அங்கு தான் உள்ளேன். நான் முத்தம்மாளின் வாரிசு இல்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் வாரிசு என்றால் தவறு. பிரவாதிகள் தான் வாரிசு என்று அசல் வழக்கு எண் 117/2015 வழக்கை

தாக்கல் செய்து வாரிசு என்று தீர்ப்பு பெற்றுள்ளார்கள் என்றால் பொய்யாக வாங்கியுள்ளார்கள். நீதிமன்ற தீர்ப்பு என்பதால் அது பொய் என்று சொல்லமுடியாது என்றால் பொய்யானதுதான்.

4. உயில் திருடு போனதிற்கான காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் மீது காழ்புணர்ச்சியின் காரணமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2006 ல் என் மகனுக்கு எழுதிய சொத்து எனக்கு எப்படி வந்தது என்றால் என் பெரியம்மாள் கொடுத்ததுதான். என் பெரியம்மாள் பெயரில் சொத்தே இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மகன் பாபு பெயரில் உள்ள சொத்தை என் மூத்த மகன் உதயகுமாருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் ஆம். உதயகுமார் தான் தற்போது உரிமையாளராக உள்ள போது அவரை வழக்கில் சேர்ந்துள்ளேனா என்றால் பாதி சொத்தைதான் எழுதிக்கொடுத்துள்ளேன். அந்த பாதி சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேனா என்றால் அந்த சொத்தைதான் அபகரிக்க வந்தார்கள். இந்த வழக்கு உதயகுமாரை சேர்க்கததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

5. 13.03.2006 தேயிட்ட செட்டில்மென்ட் பத்திரம் வா.சா.ஆ.10 ல் எனக்கு எப்படி சொத்து வந்தது என்று எழுதியுள்ளேனா என்றால் எழுதவில்லை. அரசு பட்டா கொடுத்துள்ளது. நான் இவ்வழக்கிற்காக முத்தமாளின் சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றாலும் தற்போது அரசு பட்டா கொடுத்தது என்று சொல்கிறேன் என்றால் இரண்டும் உண்மைதான். முத்தம்மாள் கொடுத்தது சர்வே எண்.596/3 தான் என்றாலும் ஆனால் நான் செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண். 882/8 க்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் அரசாங்கம் தான் சர்வே எண்ணை மாற்றிக்கொடுத்தது. அரசு சர்வே எண்ணை மாற்றிக்கொடுத்தது என்று தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. முத்தமாளுக்கு பாத்தியப்பட்டது சர்வே

எண். 596/3 தான் என்றாலும் நான் தவறாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).